சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் - தலித் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணிக்காக (Data Foundation) உருவாக்கப்பட்டுள்ள நிதியான ரூ.50 இலட்சத்திலிருந்து கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு சிறந்த எழுத்தாளர்களை ஊக்கப்படுத்த நிதி உதவி அளித்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

**ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதிந5) துறை**

அரசாணை (நிலை) எண். 81
நாள். 10.7.2006.

படிக்க:

1. அரசாணை (நிலை) எண்.58 ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத் (ஆதிந.5) துறை நாள் 4.4.2003

ஆணை:-

தலித் மற்றும் பழங்குடியினர் கலை இலக்கிய மேம்பாட்டுப் பணிக்காக (Data Foundation) உருவாக்கப்பட்டது. இதற்கான நிதியாக (CORPUS FUND) ரூ.50 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. இந்த நிதியின் மூலம் கிடைக்கும் வட்டித் தொகையைக் கொண்டு ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஆதிதிராவிடர் கிருத்துவர் எழுத்தாளர்களை ஊக்குவிக்கலாம் என முடிவெடுக்கப்பட்டது. அதனடிப்படையில் நலிந்த தலித் எழுத்தாளர்களின் படைப்புகளைக் கீழ்க்காணும் நடைமுறைகளைப் பின்பற்றி நிதியுதவி வழங்க அரசு ஆணையிடுகிறது:-

1. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை செயலரைத் தலைவராகக் கொண்டு ஒரு குழு ஏற்படுத்தப்படும். இக்குழு, தலைவரைத் தவிர அவரால் தேர்ந்தெடுக்கப்படும் தலை சிறந்த எழுத்தாளர்களாகிய 5 உறுப்பினர்களைக் கொண்டதாக இருக்கும். அவ்வாறு அமைக்கப்பட்ட குழுவே சிறந்த படைப்புகளைத் தேர்ந்தெடுக்கும்.

2. கதை, கட்டுரை, கவிதை, வரலாறு மற்றும் புதினம் ஆகிய எப்பொருளாக இருந்தாலும், ஒவ்வோராண்டும் 10 தலித் எழுத்தாளர்களுக்கு நிதி உதவி அளிப்பதுடன், தலித்துக்களின் பிரச்சினை பற்றி எழுதும் தலித் அல்லாதவர் ஒருவருக்கும் இத்தகைய நிதி உதவியை ஒவ்வோராண்டும் அளிக்கப்படும்.

3. நிதி உதவியாக அதிக அளவில் ரூ.20,000 வரை அல்லது நூல் வெளியிட ஆகும் செலவு இதில் எந்தத் தொகை குறைவாக உள்ளதோ அந்தத் தொகை வழங்கப்படும்.

4. தமிழ்ப் படைப்புகளுக்கு மட்டுமே நிதியுதவி வழங்கப்படும்..

5. எம்.பில்., பி.எச்டி போன்ற படிப்புகளுக்குத் தயாரிக்கப்படும் ஆராய்ச்சிக் கட்டுரைகளுக்கு அவை அரிதான சிறப்புடையதாக (Exceptional value) இருந்தாலன்றி நிதி உதவி வழங்கப்பட மாட்டாது.

6. ஒல்வோராண்டும், செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தி விண்ணப்பங்கள் பெறப்படும்.

7. விண்ணப்பதாரர் தங்களது படைப்புகளை குறுந்தகடுகளாகப் பதிவு செய்த (CD) மற்றும் இரு நகல்களை, அளிக்க வேண்டும்.

8. விண்ணப்பங்கள் மற்றும் இதர இணைப்புகள் வரையறுக்கப்பட்ட படிவத்தில் இருத்தல் வேண்டும்.

9. தேர்ந்தெடுக்கப்படும் எழுத்தாளர்கள் தமது படைப்புகளை 90 பக்கங்களுக்குக் குறையாமல் தயாரித்து 1000 பிரதிகளுக்கு குறையாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட நாளிலிருந்து 3 மாத காலத்திற்குள், வெளியிட வேண்டும்.

10. அனுமதிக்கப்பட்ட தொகையில் 50ரூ-ஐ முன்பணமாகவும் எஞ்சிய 50ரூ-ஐப் பணியை முடித்த பின்பும் வழங்கப்படும்.

11. நூல் அச்சிட்ட பின்பு அதன் 50 பிரதிகளை அரசுக்கு இலவசமாக அளிக்க வேண்டும்.

12. இந்நிதியுதவி ஒருவருக்கு இரண்டு ஆண்டுகட்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும்.

2. நிதி நிர்வாகப் பொறுப்பு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்களுக்குஅளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பு.ஏ. இராமையா
அரசு செயலர்.

பெறுநர்

செயலர், ஆதிதிராவிடர் (ம) பழங்குடியினர் நலத்துறை, சென்னை -9
செயலர், நிதித்துறை, சென்னை-9
இயக்குநர்,
ஆதிதிராவிடர் நலம், சென்னை-5
இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை, சென்னை 5
ஆணையர், கலை மற்றும் இலக்கியத்துறை. சென்னை.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.